Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

காட்பாடி ஊராட்சி ஒன்றியம் கரிகிரி ஊராட்சி தனி அலுவலர்(பொ) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: க.தயாளன்,

ந.க.எண்.ஆ2/1200/2020 நாள்:20.08.2020.

பொருள் : கட்டிடம் வரைபட அனுமதி - வேலூர் மாவட்டம் - காட்பாடி ஊராட்சி ஒன்றியம் - கரிகிரி ஊராட்சி – சர்வே எண்.622/1ஏ67-ல் 2.02.5 ஹெக்டர் பரப்பளவு மனை அனுமதியுடன் தரைதளம்+3 தளங்களுடன் கூடிய 7 பிளாக்குகள் கொண்ட 400 குடியிருப்பு கட்டிடங்களுக்கு கட்டிடம் கட்ட வரைபட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை : 1.உறுப்பினர் செயலர்(பொ)/இணை இயக்குநர், வேலூர் உள்ளூர் திட்ட குழுமம்/மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்.313/2020 வே உ தி கு, நாள்:31.07.2020.

2.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்-2), அறிக்கை நாள்:07.08.2020.

3.அரசாணை எண்.255/ஆர்டி (சி2), நாள்:18.08.1997.

4.தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994, ஊரக வளர்ச்சி துறை, சென்னை-டி.ஒ.கடித எண்.132109/07 டி.ஆர்.டி/பி.சி.ஏ, நாள்:14.02.1997.

5.நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வேலூர் அவர்களின் கடித எண் க.எண்.475/உ.பொ(தி)/வே.கோ.2018, நாள்:06.08.2020.

6.நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வேலூர் அவர்களின் கடித எண் க.எண்.475/உ.பொ(தி)/வே.கோ.2019, நாள்:06.08.2020.

7.காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் கடித எண் ந.க.ஆ2/1200/2020, நாள்:10.08.2020.

8.கரிகிரி ஊராட்சி மன்ற தீர்மான எண்.24, நாள்:17.08.2020.

9.காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் கடித எண் ந.க.ஆ2/1200/2020, நாள்:18.08.2020.

10.நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வேலூர் அவர்களின் கடித எண் க.எண்.475/உ.பொ(தி)/வே.கோ.2019, நாள்:19.08.2020.

*****

உத்தரவு:-

வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் கரிகிரி ஊராட்சியில் சர்வே எண்.622/1ஏ67-ல் 2.02.5 ஹெக்டர் பரப்பளவு மனை அனுமதியுடன் தரைதளம்+3 தளங்களுடன் கூடிய 7 பிளாக்குகள் கொண்ட 400 குடியிருப்பு கட்டிடங்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிடம் கட்ட வரைபட அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

1. இந்த நீல வரைபடம் 20.08.2020 தேதியில் அனுமதிக்கப்பட்டு 19.08.2021 தேதி வரை அமலில் இருக்கும்.
2. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படிதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மேற்படி வரைபடங்கள் தனி அலுவலர் மற்றும் இது சம்மந்தமான அலுவலர்கள் பார்வையிடும்படி பிரேம் செய்து வைக்கவேண்டும்.
3. வரைபடத்தில் உள்ள அளவுகள் மாற்றி தன் கௌகரியப்படி கட்டிடம் கண்டிப்பாக கட்டக்கூடாது. அவ்வாறு கட்டிடம் கட்டுவது தெரியவந்தால் வரைபட அனுமதி எவ்வித முன்அறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

4. கட்டுமான கட்டிடத்தில் வேறு எவ்விதமான விஸ்தரிப்போ அல்லது கூடுதல் கட்டுமானம் செய்ய ரேரிட்டால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து அனுமதி பெற்று கட்டிடம் ஆரம்பிக்க வேண்டும்.
5. வாசற்படிகள், ஜன்னல்கள், வெண்டிலேட்டர்கள், கைப்பிடி மற்றும் பால்கனி முதலியவைகள் வரைபடத்தின்படி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
6. சமையலறையில் புகை வெளியே போக சரியான வசதியான புகைகூண்டு தருத்திருக்கட்ட வேண்டும்.
7. சாதாரணமாக முறையில் செப்டிக் டேங்க் கழிவறை ஆகிய வசதிகள் கட்டிடப் பொறியாளரின் சரியான அளவுகள் படியும் கட்ட வேண்டும்.
8. செப்டிக் டேங்கில் உள்ள கழிவுநீர் பொது சுகாதாரத்தில் சீர்கோடு ஏற்படா வண்ணம் கட்டப்பட வேண்டும்.
9. காற்று வசதிக்கும் உண்டான ஜன்னல் வெண்டிவேட்டர்கள் போதிய அளவு அமைக்க வேண்டும்.
10. மேற்படி கட்டிடம் பட்டி முடிக்கப்பட்டவுடன் ஊராட்சிக்கு வரிவிதிப்பிற்கு விண்ணப்பித்துகொள்ள வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வேலைகள் முடிக்காவிட்டால் மீண்டும் விண்ணப்பித்து மறு உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி மறு உத்திரவு பொறமால் எந்த ஒரு விதமான கட்டிட வேலையும் செய்யக்கூடாது.
11. கட்டிடத்தை சுற்றி பலன்தரும் செடிகள் வைக்கப்பட வேண்டும்.
12. மழைநீர் சேகரிப்பு தொட்டி 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் ஆழம் மண்வேலை செய்து இதில் செங்கற்களைக் கொண்டு மழைநீர் சேகரிப்பு தொட்டி கட்டி தொட்டியினுள் மணல் 1 அடி கனம் மற்றும் 20.மி.மீ. அளவுள்ள செங்கல் 1 அடி கனம் நிரப்பி வைக்க வேண்டும்.
13. மேற்படி கூறியுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கட்டிடத்திற்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். வேறு காரியத்திற்கு எதுவும் பயன்படுத்தக்கூடாது.
14. பார்வை 7-ல் கண்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் கடிதத்தின் வளர்ச்சி தொகை ரூ.7,60,024/-ஐ கரிகிரி ஊராட்சி கணக்கு எண்.1-ல் "VILLAGE PANCHAYAT FUND A/C KARIGIRI : 500890662, IFSC Code: IDIB000D037" என்ற வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது.
15. பார்வை 10-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர் கடிதத்தின்படி மொத்த செலவின தொகையில் 1% செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டுமானத்தின் மொத்த திட்ட மதிப்பீட்டில் 1%-யினை (ரூ.28,95,400/-) "The Manual Workers General Welfer Fund, Union Bank of India, Chennai. Account No.530601010038239, IFSC No.UBIN0553069" என்ற வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது.
16. பார்வை 6-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர் கடிதத்தின்படி பணி நடைபெறும் இடத்தில் உள்ள அங்கிகரிக்கப்பட்ட நீலவரை படத்தில் அமைந்துள்ள OSR நிலத்தினை (2051.00 ச.மீ) தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்திலிருந்து ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு தானம் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 31.10.2020-க்குள் OSR நிலம் ஒப்படைக்கபட வேண்டும். இல்லை எனில் இந்த உத்திரவு இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: வரைப்படம் (1) மட்டும்.

தனி அலுவலர்(பொ)
கரிகிரி ஊராட்சி, காட்பாடி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.

பெறுநர்
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
வேலூர்

நகல்: ஊராட்சி செயலாளர்,
கரிகிரி ஊராட்சி, காட்பாடி

EXECUTIVE ENGINEER
Vellore Division / TNSCB
Vellore - 632 006

உறுப்பினர் செயலர்(பொ) / இணை இயக்குநர்,
வேலூர் உள்ளூர் திட்ட குழுமம்/மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.ப.ரங்கநாதன் , B.E.,M.Tech(IITD),AITP.,

ந.க.எண்.313 /2020 / வே உ தி கு

நாள்: 31.07.2020

பொருள் :	குடிசை மாற்று வாரியம் குடியிருப்பு கட்டிடம் – வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம்– வேலூர் மாவட்டம் – காட்பாடி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் – காகிகிரி கிராமம்–சர்வே எண்.622/1எ67 – 2.02.5 ஹெக்டேர் பரப்பளவு மனை அனுமதியுடன் தரைதளம்+3 தளங்களுடன் கூடிய 7 பிளாக்குகள் கொண்ட 400 குடியிருப்பு கட்டிடங்களுக்கு – தொழில்நுட்ப இசைவு / திட்ட அனுமதி அளித்தல் – தொடர்பாக.
பார்வை :	1. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், வேலூர் அவர்களது கடிதம் ந.க.எண். Lr.No.475/AE(P)/VLRDN/2019 நாள். 10.06.2020, 01.07.2020, 10.07.2020 (ம) 24.07.2020. 2. அரசாணை எண்.94, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை [ந.வ.4(1)] நாள்.12.06.2009. 3. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல் முறைகள் கடிதம் ந.க.பி2/18956/2019, நாள்.08.11.2019. 4. Online விண்ணப்பம் எண்.202001802033942, நாள்.08.07.2020, e-DCR Scrutiny Report :193286, நாள்.25.07.2020. 5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009 / பிஏ2, நாள் 16.04.2009. 6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/ பிஏ1, நாள். 04. 04. 2012. 7. அரசாணை எண்.397, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்12.9.1996 8. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.4.6.2004 9. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை , நாள்.04.02.2019. 10. அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை , நாள்.31.01.2020. 11. அபிவிருத்தி கட்டணம், நன்னிலை வரி கட்டணம் கோரப்பட்ட நாள்.27.07.2020. 12. மனுதாரர் கடிதம் நாள்.28.07.2020 (அபிவிருத்தி கட்டணம் நன்னிலை வரி கட்டணம் செலுத்தப்பட்ட நாள்.28.07.2020) 13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.25437/2014 / ஜி.ஆர். நாள் 02.05.2017. 14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.9278 /2007 /பிஏ1, நாள் 30.06.2017 உடன் இணைத்து பெறப்பட்ட வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமை செயலகம் , சென்னை–9 கடிதம் எண்.6188/யூடி4(3) /2017 –8 நாள்.13.6.2017.

உத்திரவு :

வேலூர் மாவட்டம், வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம், காட்பாடி வட்டம் / ஊரக ஒன்றியம், கரிகிரி கிராமம், சர்வே எண்.622/1எ67-ல் 2.02.5 ஹெக்டேர் பரப்பளவு மனையிடத்தில் தரைதளம் + 3 தளங்களுடன் கூடிய 7 பிளாக்குகள் கொண்ட 400 குடிசை மாற்று வாரியம் குடியிருப்புகள் கட்டிட மனையிடத்திற்கு மனையிட ஒப்புதலும், திட்ட அனுமதி வேண்டி பார்வை 1 –ல் காணும் மனுதாரர் கடிதத்துடன் இணைத்து பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டது.

பார்வை 2–ல் காணும் அரசாணையில் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய உத்தேசங்களுக்கு தொடர் நடவடிக்கை எடுக்க உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலருக்கு அதிகார பகிர்வு வழங்கி உள்ளதால் மேற்படி மனைக்கு '01 முதல் 09' என எல்லையிட்டு 11/2020 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும், உத்தேச குடியிருப்புகள் கட்டிடத்திற்கு 13/2020 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

உத்தேச கட்டிடம் கட்ட இருக்கும் இடத்தின் விவரம்
மனை ஒப்புதல் திட்ட அனுமதி எண்: 11 / 2020
கட்டிட திட்ட அனுமதி எண் . : 13 / 2020

Area Statement

மனையிடத்தின் பரப்பு : 20250 ச.மீ

Description	HA-95(C)/2019	HA-95(B)/2019	HA-95(A)/2019
No of Floors	G+3	G+3	G+3
Plinth Area/ Unit	37.51 Sq.m	36.93 Sq.m	37.75 Sq.m
No of Blocks	01 Nos	01 Nos	05 Nos
No of Units / Floor	8 in 1	12 in 1	16 in 1
No of Units / Block	32 in 1 (Block-7)	48 in 1(Block-6)	64 in 1 (Block-1 to 5)
Total No of Units	32 Nos	48 Nos	320 Nos
Total No of Tenaments (32+48+320) = 400 Nos			

குடியிருப்புகள் விவரம் :

Block Name	Ground Floor Area in Sq.m.	First Floor Area in Sq.m.	Second Floor Area in Sq.m.	Third Floor Area in Sq.m.	Total FSI Area in Sq.m.	No. of Dwelling Units
BLOCK – 1 (Type A)	604.08	604.08	604.08	604.08	2416.32	64
BLOCK – 2 (Type A)	604.08	604.08	604.08	604.08	2416.32	64
BLOCK – 3 (Type A)	604.08	604.08	604.08	604.08	2416.32	64
BLOCK – 4 (Type A)	604.08	604.08	604.08	604.08	2416.32	64
BLOCK – 5 (Type A)	604.08	604.08	604.08	604.08	2416.32	64
BLOCK – 6 (Type B)	443.15	443.15	443.15	443.15	1772.60	48
BLOCK – 7 (Type C)	300.07	300.07	300.07	300.07	1200.28	32
TOTAL					**15054.48**	**400**

Total FSI Area : 15054.48 Sq.m

ளும் செலுத்திய விபரம்

நன்னிலை வரி கட்டணம்	:	ரூ.40,300 /-	நாள். 28.07.2020
அபிவிருத்தி கட்டணம்	:	ரூ 1,73,000/-	நாள். 28.07.2020
Display Board Deposit	:	ரூ.1,500/-	நாள்.28.07.2020

அனுமதி கால அளவு:

பார்வை 13–ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்துடன் இணைத்து பெறப்பட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் எண். 86 பகுதி – IV, பிரிவு–2 , பக்கம் எண். 61 , நாள்.30.03.2017 (ACT NO.17 OF 2017 An Act further to amend the Tamil Nadu Town and Country Planning Act, 1971) - ன்படி 31.07.2020 தேதியிலிருந்து 5 ஆண்டுகள் மட்டும் இணைப்பில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டட உரிமையாளர் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். மேற்படி நிபந்தனைகளை அமுல்படுத்த வேலூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனைத்து உரிமைகளும் உண்டு.

சிறப்பு நிபந்தனைகள்

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. "OSR Portion should be earmarked "ABCD" Extent 2051.00 sq.m in the map and kept open to sky without any construction with the condition that the open space reservation should be handed over to the local body and also should be utilized only as a park not as a play ground.
3. வரைபடத்தில் எல்லையிடப்பட்ட A முதல் D வரை= 2051.00 ச.மீ பரப்பளவு கொண்ட OSR பகுதி சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு திறவிடமாக நிலைநிறுத்தப்பட வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அதனை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
5. " நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்கள் (கிரயப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற் கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல "

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
7. The provisions in the G.O (Ms).No.17, Housing and Urban Development(UD4(3) Department dated : 6.2.2016 relating to installation and use of Solar Energy System should be followed
8. பார்வை 6–ல் கூட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றரிக்கையின் படி "The Tamil Nadu Government in G.O.Ms.No. 112, Housing & Urban Development Department dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act 2016, The Promoter has to advertise, Market, Book, Sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority".
9. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் அவர்களின் 27.07.2020 நாளிட்ட கடிதத்தில் மனையிடத்தின் வழியே செல்லும் இரண்டு ஓடைப்பகுதிகளை வேளாண்மை பாசனத்திற்கு ஏற்றவாறு வேலூர் கோட்டத்தின் மூலம் மக்களின் பயன்பாட்டிற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் ஒரு ஓடைப்பகுதியாக கட்டுமான அமைப்பில் மாற்றி அமைக்கப்படும் என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மனையிடத்தில் கால்வாய் அமைப்பு நடைமுறையில் உள்ள உரிய விதிகளின் படியும், பொதுப்பணித்துறை அனுமதியுடனும் அமைக்கப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. உத்தேச குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகன நிறுத்திமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 11.10.2002–ன் படி கட்டடத்தில் செயல்படுத்த வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதரதேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7. மனையில் அனைவரும் குடிநீர் மேல் நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு வசதிகள் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் நீர்கசிவுத் தடுப்பு வசதிகள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண் 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (ந.நி.1) துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிக்கையின்படி உத்தேச கட்டடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1971 பிரிவு 25(Water Act)- ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
13. உத்தேச கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர், காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்டு உத்தரவினை மனுதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக வட்டார வளர்ச்சி அலுவலர், காட்பாடி ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், காட்பாடி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

31/07/2020

உறுப்பினர் செயலர் (பொ) / இணை இயக்குநர்,
வேலூர் உள்ளூர் திட்ட குழுமம் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

21/8/2020

3/7/2020

21/8/20

EXECUTIVE ENGINEER
Vellore Division / TNSCB
Vellore - 632 006

21/8/2020

இணைப்பு : இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

பெறுநர் :

வட்டார வளர்ச்சி அலுவலர்,
காட்பாடி ஊராட்சி ஒன்றியம்,
காட்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம்.

AEE 21/8

நகல் :

செயற் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
வேலூர் கோட்டம், 22, 9வது தெரு,
கோபாலபுரம், கழிஞ்சூர், வேலூர் – 632006.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate